IntSym 2019
9th International Symposium

# மலையகத்தில் மத்தியதர வர்க்கமும் சிறுகதைகளும்: ஓர் ஆய்வு

**M.M. Jayaseelan**[265]

Correspondence: jseelanuop@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மலையகத் தமிழ்ச் சமூக உருவாக்கமானது, பெருந்தோட்டத் தொழிலாளர்களைத் தளமாகக் கொண்டு உருவாக்கம் பெற்றிருந்தாலும் அச்சமூகத்துள் ஏற்பட்டுவரும் மேல்நோக்கிய அசைவியக்கம் காரணமாக தொழிலாளர் என்ற வர்க்கத் தட்டில் இருந்து மத்தியதர வர்க்கமொன்றும் உருவாக்கம் பெற்றுள்ளது. பெருந்தோட்டத் தமிழரிடத்தே ஏற்பட்ட கல்விவிருத்தி, அரசியல் அபிவிருத்தி, பொருளாதாரவிருத்தி, சமூக-அரசியல் இயக்கங்களின் செயற்பாடுகள், தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமை மற்றும் தனியார்மயமாக்கப்பட்டமை, பிரஜாவுரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்டமை போன்ற பல காரணங்களால் அச்சமூகத்தில் பலமான மத்தியதர வர்க்கமொன்று மேற்கிளம்பியுள்ளது. அச்சமூகமாற்றம் மலையகத் தமிழ்ச்சமூக வாழ்விலும் இலக்கியப் போக்கிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. இம்மாற்றங்கள் குறித்த அறிதல் மலையகத் தமிழ்ச் சமூக வளர்ச்சி, மலையகத் தமிழ் இலக்கியச் செல்நெறி போன்றவற்றை அறிந்துகொள்ளத் துணைபுரியும். அவ்வகையில் இந்த ஆய்வானது, சிறுகதைகளில் மலையக மத்தியதர வர்க்கம் பற்றி எவ்வாறான பதிவுகள் இடம்பெற்றுள்ளன என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலையக மத்தியதர வர்க்கம் பற்றிய பதிவுகளைக் கொண்டுள்ள சிறுகதைகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ள இந்த ஆய்வு, இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பண்புசார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவுகள் உள்ளடக்க பகுப்பாய்வு முறையில் விபரண அணுகுமுறையின்கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அதன்படி மலையகத்தில் மேற்கிளம்பிய மத்தியதர வர்க்கம் இரண்டு பின்புலங்களிலிருந்து மேற்கிளம்பியுள்ளன என்பதைக் கண்டுகொள்ளமுடிகின்றது. ஒன்று, தோட்டத்தின் இடைநிலைப் பணியாளர்களாக விளங்கிய பெரிய கங்காணிகள், டீமேக்கர்கள், எழுதுவினைஞர்கள், தொழிற்சாலை அலுவலர்கள், தட்டெழுத்தாளர்கள், உதவி மருத்துவர்கள், மேற்பார்வையாளர்கள், கணக்கப்பிள்ளை, சாரதிகள் போன்றோர் மத்தியதர வர்க்கத்தினராக மாறியுள்ளனர். இரண்டாவது, கற்று உயர்தொழில்களைப் பெற்றதன் மூலம் மத்தியதர வர்க்கத்தினராக உயர்ந்துள்ளனர். இப்பிரிவில் ஆரம்பத்தில் பெரிய கங்காணி, கணக்கப்பிள்ளை போன்ற இடைநிலைப் பணியாளர்களின் பிள்ளைகளே முன்னணி வகித்துள்ளனர். அவர்களுக்கே தோட்டங்களை அண்டிய நகரங்களிலும் நாட்டினுடைய பெருநகரங்களிலும் சென்று கல்வி பெறுவதற்கான வாய்ப்பு இருந்துள்ளது. இந்நிலையில் பிந்திய காலத்தே மாற்றங்கள் ஏற்பட்டன. சாதாரண தொழிலாளியின் பிள்ளைகளும் கல்வி கற்று பெருந்தோட்ட எல்லைகளைத் தாண்டி அரச மற்றும் தனியார் துறைகளில் உயர் பதவிகளைப் பெற்று மத்தியதர வர்க்கமாக உயர்ந்துள்ளனர். இடைநிலைப் பணியாளர்கள் தொழிலாளர்கள்மீது ஆதிக்கம் செலுத்தும் அராஜகவாதிகளாக விளங்கியுள்ளதோடு தோட்டமக்களிலிருந்து ஓர் அந்நியத் தன்மையைப் பேண முனைந்துள்ளனர். தோட்டத்தொழிலாளர் குழுமத்திலிருந்து மத்தியதர வர்க்கமாக மேற்கிளம்பியவர்கள் பொருளாதாரரீதியாக வளம்பெற்று நகரங்களில் வாழ்வதோடு அவர்களும் தோட்டங்களுடனான தொடர்பினைப் பேண விரும்பாததோடு ஓர் இடைவெளியையும் வளர்த்து வந்துள்ளனர். இம்மத்தியதர குழுமத்தின் வாழ்வும் எதிர்பார்ப்பும் தொழிலாளர் வாழ்விலிருந்து பெரிதும் மாற்றங்கண்டுள்ளன. இத்தகைய பதிவுகளே சிறுகதைகளில் அதிகம் வெளிப்பட்டுள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர் பற்றிய இலக்கியப் பதிவுகளுடன் ஒப்பிடுகையில் புதிய மத்தியதரவர்க்கம் பற்றிய மொத்தப் பதிவுகளும் இன்னும் இலக்கிய வெளியில் முழுமையாகப் பதிவுசெய்யப்பட்டில்லை. இதற்கு மலையகத் தமிழர் யார், எவர் என்ற சரியான புரிதல் இன்மையே அடிப்படைக் காரணமாக அமைகின்றது எனலாம். மலையகத் தமிழரின் சமூக அசைவியக்கம் குறித்த தெளிவு ஏற்படுமிடத்து இந்த இடைவெளி பூரணப்படுத்தப்படும்.

**பிரதான சொற்கள்**: இடைநிலைப் பணியாளர், சமூக அசைவியக்கம், மலையகம், மத்தியதர வர்க்கம்

## அறிமுகம்

மலையகத் தமிழரின் சமூக வரலாற்றில் அண்மைக்காலங்களில் அரசியல், சமூக, பொருளாதார மட்டத்தில் முக்கியமான மாறுதல்கள் பல இடம்பெற்று வருகின்றன. பிரஜாவுரிமைப் பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டமை, மலையகத்தில் ஏற்பட்டுவரும் கல்வி விருத்தி,

[265] Department of Tamil, University of Peradeniya, Sri Lanka.

பெருந்தோட்டத்துறைசாரா தொழில்நகர்வு, பெருந்தோட்டங்களிலிருந்து நகரங்களை நோக்கிய குடிப்பெயர்வு, அரசியல் அபிவிருத்தி போன்றன விசேடமாகக் குறிப்பிடத்தக்க மாறுதல்களாகும். இவற்றின் தாக்கங்களினால் அச்சமூகத்தில் பலர் தொழிலாளர் என்ற வர்க்கத் தட்டில் இருந்து பெயர்ந்து மத்தியதர வர்க்கமாக உயர்ந்துள்ளனர். அந்த வர்க்க மாற்றம் மலையகத் தமிழ் இலக்கியப் போக்கிலும் மாற்றங்களை ஏற்படுத்திவருகின்றது. குறிப்பாக, 'பெருந்தோட்டத் தொழில்துறை சமூகத்தையும் அதன் தனித்துவமான வாழ்வியல் அம்சங்களையும் அச்சமூகத்தின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளையும் பிரதிபலித்து வந்த மலையகத் தமிழ் இலக்கியம், அச்சமூகத்தில் ஏற்பட்டுவரும் புதிய மாற்றங்களையும் உள்ளடக்கி தனது எல்லையை அகலப்படுத்தியுள்ளது. அதன்படி அண்மைக்கால மலையகத் தமிழ் இலக்கியமானது பெருந்தோட்டத்துறை வாழ்வியல், பெருந்தோட்டத்துறை சாராத வாழ்வியல் என்ற இரண்டு பிரதான கிளைகளைக் கொண்டுள்ளது' (ஜெயசீலன், 2018: 27). இங்கு பெருந்தோட்டத்துறைசாரா குழுமத்தின் முக்கியமான பிரிவினராக மலையகத்தில் இருந்து மேற்கிளம்பிய மத்தியதர வர்க்கத்தினர் விளங்குகின்றனர். அம்மத்தியதர வர்க்கத்தினரின் வாழ்வியல் எவ்வாறு அமைந்துள்ளது, அவர்களது மனோபாவம், எதிர்பார்ப்புகள் எவை, அவர்கள் குறித்த இலக்கியப் பதிவுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பன குறித்த புரிதல் மலையகத் தமிழரின் அண்மைக் காலச் சமூக வரலாறு, அச்சமூகத்தில் ஏற்பட்டுவரும் வளர்ச்சி, எதிர்கால மலையகச் சமூகத்தின் போக்கு போன்றன குறித்த தெளிவுக்கு துணைநிற்பதோடு மலையகத் தமிழ் இலக்கியப் போக்கில் ஏற்பட்டுவரும் முக்கியமான மாறுதல்களைக் கண்டறியவும் துணையாக அமையும். அவ்வகையில் இக்கட்டுரையானது மலையகத்தில் மேற்கிளம்பும் மத்தியதர வர்க்கம் பற்றிய சிறுகதைப் பதிவுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆராய்வதாக அமைந்துள்ளது.

## ஆய்வு முறையியல்

மலையகத் தமிழ் மத்தியதர வர்க்கம் பற்றிய பதிவுகளைக் கொண்டுள்ள சிறுகதைகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ள இந்த ஆய்வு, பண்புசார் ஆய்வாக அமைந்துள்ளது. உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையில் விபரண அணுகுமுறையின்வழி பகுத்தாராயப்பட்டுள்ளது.

## கலந்துரையாடலும் பெறுபேறுகளும்

ஒரு தனிநபர் அல்லது ஒரு குழு, ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் தான் இருக்கின்றன நிலையிலிருந்து தொழில், அந்தஸ்து, சமூக தராதரங்கள், அதிகாரம் போன்றவற்றில் உயரும்போது ஒரு வர்க்கப் படிநிலையிலிருந்து இன்னொரு படிநிலைக்கு நகர்கின்றனர். இந்நகர்வு பொதுவாக எல்லாச் சமூகங்களிலும் இடம்பெற்றுவருகின்றது. இந்நகர்வினைக் கல்வி, தொழில், அந்தஸ்து, அதிகாரம், செல்வம் போன்ற பல காரணிகள் தீர்மானிப்பவையாக அமைந்தாலும் அவை யாவற்றுக்கும் அடிப்படையாகப் பொருளாதார விருத்தியே அமைகின்றது. அவ்வகையில் ஒரு தனிநபர் அல்லது குழு தான் இருக்கின்ற பொருளாதார நிலையிலிருந்து மேல்நோக்கி உயரும்போது வர்க்கப் படிநிலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன எனலாம். இவ்வர்க்கப் படிநிலையைப் பொதுவாக, உயர் வர்க்கம், மத்தியதர வர்க்கம், கீழ் வர்க்கம் எனப் பாகுபடுத்துவது மரபு. இங்கு மத்தியதர வர்க்கத்தினர் என்போர் உயர் வர்க்கத்துக்கும் கீழ்வர்க்கத்துக்கும் இடைப்பட்டவர்களைக் குறிக்கின்றது.

காலனிய ஆட்சி இடம்பெற்ற நாடுகளினது பொது இயல்பாக அந்நாடுகளில் மத்தியர வர்க்கமொன்று தோற்றம்பெற்றமை அமைகின்றது. காலனிய நிர்வாகம் ஏற்படுத்திய கல்வி வசதி, அரச நிர்வாகத் துறைகள், அரசியல் சீர்திருத்தங்கள், சிவில் சேவைகள், பொருளாதார முறைகள் போன்றவற்றின் காரணமாக பாரம்பரியச் சமூகத்திலிருந்து ஒரு மத்தியதர வர்க்கம் உருவாக்கம் பெற்றுள்ளது. அவர்களுள் பெரும்பாலானோர் ஆங்கிலக் கல்வி கற்று அரச உத்தியோகங்கள் பார்ப்பவர்களாக விளங்கியுள்ளனர். அத்துடன் அவர்களில் ஒரு சாரார் காலனிய அரச விசுவாசிகளாக இருக்க, இன்னொரு பிரிவினர் நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்துக்காகவும் விடுதலைக்காகவும் தம்மையே அர்ப்பணித்துச் செயற்படுபவர்களாக விளங்கியுள்ளனர். இலங்கையிலும் இப்போக்கினைத் தெளிவாகக் காணமுடிகின்றது. இலங்கையில் முதலாளித்துவத்தின் எழுச்சி பற்றி குமாரி ஜயவர்தனாவின் பின்வரும் கருத்துக்கள் இலங்கையில் தோற்றம் பெற்ற மத்தியதர வர்க்கத்தினரின் தன்மைகளையும் விளக்கிநிற்கின்றன:

> 'இலங்கையில் முதலாளித்துவத்தின் எழுச்சி ஆரம்ப கட்டத்தில் சாராயக் குத்தகை, பெருந்தோட்ட விவசாயம், நிலங்களைக் கொள்வனது செய்து பெரும் சொத்துடைமையாளராதல் என்னும் வழிகளில் தொடக்கம் பெற்றது. இவ்வாறு தோற்றம் பெற்ற முயற்சியாளர் வகுப்பின் ஒரு பகுதியினர் பின்னர் ஏற்றியிறக்கல், போக்குவரத்து ஒப்பந்த வேலை, கொந்தராத்து முறையில் பல்வேறு வேலைகளைச் செய்விக்கும் ஒப்பந்த வேலைகள், காரியச் சுரங்க அகழ்வுத் தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் ஈடுபட்டு லாபம் ஈட்டிப் பெரும் செல்வந்தர்களாயினர். இன்னோர் பிரிவினர், உயர் அரசாங்கப் பதவிகள், இடைநிலைப் பதவிகள், கல்வியின் வழியாகப் பெறும் சட்டம், மருத்துவம் போன்ற துறைகளில் உயர்தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு மேல்நிலை எய்தினர்' (குமாரி ஜயவர்தனா, 2009: IX,X).

அவ்வாறு மேல்நிலை எய்தியவர்களே மத்தியதர வர்க்கமாக உருக்கொண்டனர். எனவே, இலங்கையில் இடம்பெற்ற பெருந்தோட்ட உற்பத்திமுறை, புதிய சந்தை வாய்ப்புக்கள், வர்த்தகம், கல்வியின் மூலம் பெற்றுக்கொண்ட உயர் அரச பதவிகள் மற்றும் சேவைத்துறைப் பதவிகள் மூலம் புதிய மத்தியதர வர்க்கம் தோற்றம்பெற்றது எனலாம். இம்மத்தியதர வர்க்கத் தட்டில் உயர்நிலையில் இருப்பவர்கள் உயர்மத்தியதர வர்க்கத்தினர் என்றும் கீழ் நிலையில் இருப்பவர்கள் கீழ்மத்தியதர வர்க்கத்தினர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களுள் உயர்மத்தியதர வர்க்கத்தினர் 'தன்னை முதன்மைப்படுத்தி, தனது உயர்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தனது சமூகம் பற்றிய எவ்வித சிந்தனையும் அற்று, அந்தச் சமூகத்தின் நலன், உயர்வு எனக் காட்டிக் கொள்வதினூடாக தனது நலனைப் பிரதானப்படுத்தி வாழுபவர்கள்' என்று கூறப்படுகின்றது (செல்வராஜா, 2017: 67). அதேவேளை 'தன்னோடு ஒத்த தன்னைச் சூழவுள்ள மக்களைப் பற்றி சிந்தித்து, செயலாற்றும் உணர்வுமிக்க சமூகக் கடப்பாடோடு அதனை தனது கடமையாகக் கொண்டு, அச்சமூக உயர்வு அல்லது விடுதலையையே குறிக்கோளாகக் கொண்டு – சமூக நலனை முதன்மைப்படுத்தும் வர்க்கம் கீழ்மத்தியதர வர்க்கமாகும்' எனக் கூறப்படுகின்றது (மேலது: 67). இவ்வாறு பொதுவாக வரையறுக்கப்பட்டாலும் அவ்விரு நிலைகளிலும் மேற்கூறிய இரு நோக்குகள் உள்ளவர்களை இனங்காணக் கூடியதாகவே உள்ளது.

இலங்கையில் மத்தியதர வர்க்க உருவாக்கத்தில் பெருந்தோட்டத் தொழிற்துறை பெருந்தாக்கத்தைச் செலுத்தியபோதும் அச்சமூகத்துள்ளிருந்து மிகவும் பிந்திய காலத்திலேயே மத்தியதர வர்க்கத்தின் உதயம் இடம்பெற்றுள்ளது. கூலித்தொழிலாளர்களாக, கம்பனி நகரங்கள் எனப்பட்ட தனி ராச்சியத்துக்குள் கல்வி விருத்தியற்று கட்டுண்ட தொழிலாளர்களாக வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்ததால் அவர்களிடமிருந்து அத்தகைய மத்தியதர வர்க்கம் காலனிய ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் உதயமாகவில்லை. ஆனால், பெருந்தோட்டங்களில் கடமையாற்றிய பெரிய கங்காணி, கணக்கப்பிள்ளை முதலியோர் படிப்படியாக வர்க்கப் படிநிலையில் உயர்ந்து வந்தனர். அவ்வுயர்ச்சியின் வெளிப்பாடு 1920களிலேயே பரவலாக உணரப்பட்டது. மலையகத்திலிருந்து படித்த பலர் உருவாக்கம் பெற்றதோடு நாட்டினுடைய தேசிய அரசியலிலும் தொழிற்சங்கச் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டதுடன் பிந்திய காலத்தே அரச தொழில்களையும் பெற்றுக்கொண்டனர். இக்காலத்திலிருந்து அதிகரிக்கத் தொடங்கிய மத்தியதர வர்க்கத்தினரின் ஆதிக்கப்படர்ச்சி 1960களில் மலையகத்தில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தின. அதன்தொடர்ச்சியாக 1980கள் முதல் மலையகத்தில் வளர்ச்சிபெற்றதும் பலம் பொருந்தியதுமான மத்தியர வர்க்கம் எழுச்சிபெறத் தொடங்கியது. அதன் வளர்ச்சி இருபத்தியோராம் நூற்றாண்டில் வேகமாக இடம்பெற்றுவருகின்றது. அத்தகைய மத்தியதர வர்க்கத்தின் எழுச்சியில், மலையகத்தில் ஏற்பட்ட கல்வி விருத்தி, மலையகத்தில் விருத்திபெற்ற அரசியல் பங்குபற்றல், தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமை, தோட்டங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டமை, மலையகத்தில் இயங்கிய சமூக, அரசியல் இயக்கங்களின் செயற்பாடுகள், தேசிய அளவில் கொண்டுவரப்பட்ட செயற்பாடுகள், பிரஜாவுரிமைப் பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை போன்றன பிரதானமாக செல்வாக்குச் செலுத்தின எனலாம். இன்றைய நிலையில் அரச உத்தியோகத்தவர்களாகவும் தனியார்துறை உத்தியோகத்தர்களாகவும் வர்த்தகத்துறையினராகவும் சுயதொழில் முயற்சியாளர்களாகவும் பெருந்தோட்ட நிர்வாக உத்தியோகத்தர்களாகவும் அரசியல்வாதிகளாகவும் தொழிற்சங்கவாதிகளாகவும் சட்டத்தரணிகளாகவும் மருத்துவர்களாகவும் அம்மத்தியதர வர்க்கத்தினர் பரந்துள்ளனர். மலையகத்தில் செயற்பட்ட அமைப்புக்கள் பெரிதும் இம்மத்தியதர வர்க்கத்தினரால் தோற்றுவிக்கப்பட்டுள்ளதோடு மலையகத்தில் உதயமாகிய புத்திஜீவிகளில் பெரும்பாலானோரும் இம்மத்தியதர வர்க்கப்பின்னணியில்

மேற்கிளம்பியவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. மலையகத் தமிழரின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்வில் இம்மத்தியதர வர்க்கத்தினரின் பாதிப்பு கனதியானதாகவே அமைந்துள்ளது.

மலையகத்தில் மேற்கிளம்பிய மத்தியதர வர்க்கம் இரண்டு பின்புலங்களிலிருந்து மேற்கிளம்பியுள்ளன என்பதைச் சிறுகதைகள் மூலம் கண்டுகொள்ளமுடிகின்றது. ஒன்று, தோட்டப் பணியாளர்கள் மத்தியதர வர்க்கத்தினராக மேற்கிளம்பியுள்ளனர். தோட்டங்களில் பெரிய கங்காணிகள், டீமேக்கர்கள், எழுதுவினைஞர்கள், தொழிற்சாலை அலுவலர்கள், தட்டெழுத்தாளர்கள், உதவி மருத்துவர்கள், மேற்பார்வையாளர்கள், கணக்கப்பிள்ளை, சாரதிகள் போன்றோர் மத்தியதர வர்க்கத்தினராக மாறியுள்ளனர். இந்தப் பணியாளர் அந்தஸ்தில் ஆரம்ப காலத்தில் தொழில்புரிந்தவர்கள் பெரும்பாலும் தலைமைக் கங்காணி அல்லது தோட்டங்களிலேயே வேலை செய்த மத்தியதர வகுப்பினரின் சந்ததிகளாகவே காணப்படுகின்றனர். பிந்திய காலத்தே தொழிலாளர் குடும்பங்களிலிருந்தும் பலர் அப்பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இரண்டாவது, கற்று உயர் தொழில்களைப் பெற்றதன் மூலம் மத்தியதர வர்க்கத்தினராக உயர்ந்தவர்கள். இப்பிரிவிலும் ஆரம்பத்தில் பெரிய கங்காணி, கணக்கப்பிள்ளை போன்றோரின் பிள்ளைகளே முன்னணி வகித்தனர். அவர்களுக்கே தோட்டங்களை அண்டிய நகரங்களிலும் நாட்டினுடைய பெருநகரங்களிலும் சென்று கல்வி பெறுவதற்கான வாய்ப்பு இருந்தது. அதனாலேயே ஆரம்ப காலத்தில் உதயமாகிய மலையகத்தின் தொழிற்சங்க மற்றும் அரசியல், சமூக செயற்பாடுகளில் இப்பின்புலத்தைச் சார்ந்தவர்கள் முன்னணி வகித்தனர். இந்நிலையில் பிந்திய காலத்தே மாற்றங்கள் ஏற்பட்டன. சாதாரண தொழிலாளியின் பிள்ளைகளும் கல்வி கற்று பெருந்தோட்ட எல்லைகளைத் தாண்டி அரச மற்றும் தனியார் துறைகளில் உயர் பதவிகளை வகிக்கத் தொடங்கியதோடு மலையகத்தில் தொழிற்சங்கங்களையும் அரசியல் கட்சிகளையும் உருவாக்கி செயற்படத் தொடங்கினர். நாட்டில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களே இம்மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்தன. அத்துடன் வர்த்தகம், தொழிற்சங்க-அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் மத்தியதர வர்க்கத்தினராக உயர்ந்துள்ளனர். இவ்வாறு மத்தியதர வர்க்கத்தினராக மேற்கிளம்பியவர்கள் பற்றிய பல்வேறு பதிவுகள் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளன.

மத்தியதர வர்க்கமாக உருமாறிய தோட்டப் பணியாளர்கள் பற்றிய பதிவுகளுக்கு மாத்தளை சோமுவின் அவன் ஒருவனல்ல, ஆர், எஸ். மணியின் கீறிய கரம், செ. கணேசலிங்கனின் சாயம், தெளிவத்தை ஜோசப்பின் பாவ சங்கீர்த்தனம், அம்மா, எக்சீமா, சாரல்நாடனின் பிரேத ஊர்வலம், திருப்தி, அடிச்சுவடு, கலங்கிய கண்கள், மு. சிவலிங்கத்தின் அலவன்ஸ் லேபரர், நிலைமை கொஞ்சம் உயரும் போது…, சம்திங் ரோங் போன்ற கதைகளை உதாரணமாகக் கூறலாம்.

அவன் ஒருவனல்ல கதையில் வரும் கணக்கப்பிள்ளை குடும்பத்தினர் நகரில் சொந்த வீடு கட்டிக் குடியேறுகிறார்கள். அத்துடன் அவரது மகன் கற்று ஆசிரியனாகின்றான். அவன் ஒரு தோட்டப் பாடசாலையில் கடமையாற்றுவது தாய்க்கும் தந்தைக்கும் பிடிக்கவில்லை. பல்வேறு வகையில் அழுத்தங்களைப் பிரயோகித்து அவனை நகரப் பாடசாலைக்கு வருமாறு வற்புறுத்துகின்றனர். ஆர். எஸ். மணியின் கீறிய கரத்தில் தோட்டத்தில் குமாஸ்தாவாகப் பணி புரிபவரையும் தெளிவத்தை ஜோசப்பின் பாவசங்கீர்த்தனத்தில் தலைமை குமாஸ்தாவையும் அம்மாவில் தோட்டத்து சூப்பவைசரையும் காணமுடிகின்றது. இவற்றினைவிட சாரல்நாடனின் கதைகளிலேயே தோட்டத்தில் பணி புரியும் மத்தியதர வர்க்கத்தினர் பற்றிய பதிவுகள் அதிகம் இடம்பெற்றுள்ளன. சாரல்நாடனும் அத்தகைய பணியாளர் குழாத்தினைச் சார்ந்தவர் என்பதால் அவர்கள் பற்றிய பதிவுகளை அதிகமாகத் தந்துள்ளார் எனலாம். உதாரணமாக, பிரேத ஊர்வலம் என்ற கதையில் கணக்கப்பிள்ளை குடும்பம் பற்றிய சித்திரிப்பு வருகிறது. அவரது மகன் கற்று ஆசிரியனாகின்றான். அத்துடன் அக்கணக்கப்பிள்ளையின் குடும்ப வாழ்வானது பெரிதும் தோட்டத் தொழிலாளரின் வாழ்விலிருந்து அந்நியப்பட்டதாகவே விளங்குகிறது. கணக்கப்பிள்ளையும் தன்னுடைய மகன் தோட்டத் தொழிலாளர்களுடனும் அவர்களது குடியிருப்புப் பகுதிகளுடனும் தொடர்பு வைத்துக் கொள்வதை வெறுக்கின்றார். எடுத்துக்காட்டாக: தொழிலாளி ஒருவரின் மரண வீட்டுக்குச் சென்று வந்த மகனுக்கும் கணக்கப்பிள்ளையான தந்தைக்கும் இடையிலான உரையாடல் பின்வருமாறு இடம்பெறுகின்றது:

‘இவ்வளவு நேரம் எங்கப்பா போயிருந்தாய் வீட்டுல இல்லாம. ஒங்க அம்மா சொன்னா.

ஆமாப்பா இப்படியே கீழே லயம் வரைக்கும் போய்விட்டு வந்தேன்

களவு செய்து பிடிபட்டவனைப் போன்ற குரலில் பதிலளித்தேன்.

…லயத்துக்கா ஏன் அங்க என்னா வேலை?

லயத்துக்குப் போகவில்லையப்பா. ரோட்டில் நின்று நடந்ததைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

அதுதான் கேக்கிறேன். அங்க நமக்கென்ன வேலை? தோட்டத்தில் உள்ள எந்தெந்தப் பயலோ சாவுறான். அதுக்கெல்லாம் நாம போய்க்கொண்டிருக்க முடியுமா?' (சாரல்நாடன், 1994: 30,31)

இந்தச் சம்பாசனை கணக்கப்பிள்ளையினதும் அவரது மகனதும் மனநிலையைத் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. சாரல்நாடனின் திருப்தி என்ற கதையில் சூப்பவைசர், அடிச்சுவடு என்ற கதையில் பெரிய கிளார்க்கர், கலங்கிய கண்கள் என்ற கதையில் டீமேக்கர் போன்ற பணியாளர்கள் பற்றிய குறிப்புக்கள் உண்டு. அதேவேளை மு. சிவலிங்கத்தின் அலவன்ஸ் லேபரர் என்ற கதையிலும் சம்திங் ரோங் என்ற கதையிலும் பெரிய கிளார்க்கர் பற்றிய பதிவுகளும் நிலைமை கொஞ்சம் மாறும்போது என்ற கதையில் கங்காணி குடும்பம் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வகையான கதைகளில் தோட்டப் பணியாளர்களாக விளங்கிய மத்தியதர வர்க்கத்தினர் பெரிதும் அராஜக வாதிகளாகவும் தொழிலாளர்களைச் சுரண்டுபவர்களாகவும் தொழிலாளர்களை வருத்துபவர்களாகவும் இருந்துள்ளனர் என்ற பதிவே இடம்பெற்றுள்ளன. செ. கணேசலிங்கனின் சாயம் என்ற கதையில் இடம்பெறும் பின்வரும் குறிப்பு இதற்கு தக்க எடுத்துக்காட்டாக அமைகின்றது:

'அந்தத் தேயிலைத் தோட்டத்தின் காட்டு ராசாவாக விளங்கும் துரை செல்வராஜா, தொழிலாளர்களை ஆட்டு மந்தைகளாக எண்ணி இருக்கும் கண்டக்டர் கணகசபை, தொழிலாளர்களைத் தமது பரீட்சைக்குரிய எலிகளாகக் கருதும் அப்போதிகாரி அபயசேகரா, அரிசியை அடிப்பக்கமாக வெட்டித் தம்முடைய வயிற்றைச் சாராயத்தால் நிரப்பும் தலைமை குமாஸ்தா தர்மலிங்கம், மண்தூளைக்கூட மறைவாகத் தொழிலாளர்களுக்கு விற்று தமது மனைவியின் உடலைப் பட்டுக்களால் அலங்கரிக்கும் டீ மேக்கர் திகிரி பண்டா ஆகிய அனைவரது கருடப் பார்வையும் தன்மேல் விழுந்திருப்பதைத் தங்கப்பன் அன்று கண்டு கொண்டான்' (உழைக்கப்பிறந்தவர்கள், 1997: 393)

இக்குறிப்புக்கள் தோட்டப் பணியில் ஈடுபட்ட மத்தியதர வர்க்கத்தினரின் அராஜகத்தின் சாரத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு அவர்கள் அராஜகம் மிக்கவர்களாக விளங்கியபோதும் அவர்களது வாரிசுகள் பலர் மலையகத் தமிழரின் விமோசனத்துக்காக அக்கறையுடன் செயற்பட்டுள்ளனர். அவன் ஒருவனல்ல கதையில் வரும் கணக்கப்பிள்ளையின் மகன், தோட்டப் பாடசாலை மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்குவதே தனது நோக்காகக் கொண்டு பெற்றோரின் வார்த்தைகளைத் தட்டிக்கழித்து நகருக்கு வர மறுக்கிறான். அவ்வாறே சாரல்நாடனின் பிரேத ஊர்வலத்தில் வரும் கணக்கப்பிள்ளையின் மகனும் தொழிலாளரின் விடுதலையில் தீவிர அக்கறை கொண்டுள்ளான்.

மலையகத்தில் முதலாம் கட்டத்தில் கல்வி பெற்று தோட்டத்துப் பணிகளையும் ஏனைய தொழில்களையும் முதலில் பெற்றுக்கொண்டவர்கள் இந்த மத்தியதர வர்க்கத்தினரின் வாரிசுகளே என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணத்துக்கு, அவன் ஒருவனல்ல, பிரேத ஊர்வலம், நிலைமை கொஞ்சம் உயரும் போது… போன்ற கதைகளைக் கூறலாம். மு. சிவலிங்கத்தின் நிலைமை கொஞ்சம் உயரும்போது… என்ற கதையில் கல்வியில் தேரிய கங்காணியின் மகன், கொழும்பில் ஒரு தனியார் கம்பனியில் அக்கவுண்டனாக பதவி வகிக்கின்றான். பிரேத ஊர்வலம், அவன் ஒருவனல்ல ஆகிய கதைகளில் கணக்கப்பிள்ளைகளின் மகன்மார் ஆசிரியர்களாகின்றனர். இரண்டாம் கட்டத்திலேயே தொழிலாளர் குழுவிலிருந்து ஒருசிலர் தோட்டப் பணியாளர் குழுவினுள் சேர்க்கப்பட்டுள்ளனர். உதாரணத்துக்கு: தெளிவத்தை ஜோசப்பின் எக்சீமா கதையில் வரும் சின்னக்கணக்கப்பிள்ளை தோட்டத்தின் அடிமட்ட தொழிலாளியாக விளங்கிய சுத்திகரிப்புப் தொழிலாளியின் மகனாவான். அத்தோடு அவரது அம்மா என்ற கதையில் வரும் சூப்பவைசரும் சாதாரணத் தொழிலாளியின் மகனேயாவான். சாரல்நாடனின் திருப்தி என்ற கதையில் வரும் தொழிலாளப் பெண்ணின் பின்வரும் மனவோட்டமும் தொழிலாளர் குழுவிலிருந்து பலரும் தோட்டப் பணிகளில் மத்திய பதவிகளை வகிக்கத் தொடங்கினர் என்பதைக் காட்டுகின்றது:

'நகர்புறக் கல்லூரிகளில் படித்துவிட்டு மேசோடும் சப்பாத்தும் அணிந்து வேலைபார்க்க ஆரம்பித்திருக்கும் சுப்பவைசர்களை அவள் நாளாந்தம் பார்த்திருக்கிறாள்? அவர்களில் பலரும் தோட்டச் சமுதாயத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் தாமே' (சாரல்நாடன், 1994: 38)

இவ்வாறு சிந்திக்கும் அவள் தனது மகனையும் குறைந்தது சூப்பவைசராகசரி உருவாக்க வேண்டும் என்று எண்ணுகிறாள். இவ்வாறு தோட்டப் பணியாளர் குழாத்தில் மத்திய பதவிகளில் தொழிலாளர் குழுவிலிருந்து பலர் பெற்றுக்கொள்ளத் தொடங்கியதோடு இன்னும் பலர் கற்று தோட்டத்துறை சாராத

தொழில்களைப் பெற்று சமூகப் படிநிலையில் மத்தியதர வர்க்கத்தினராக உயர்ந்தனர். அவ்வாறு உயர்ந்தவர்களைத் தெளிவத்தை ஜோசப்பின் அம்மா, மழலை, இருப்பியல், மண்ணைத்தின்று, கே. கோவிந்தராஜின் சீதனம், சாந்தாராஜின் கௌரவம், சபலம், தி.ராஜகோபாலனின் அந்தரங்கப் பூக்கள், அல் அஸ்மத்தின் விரக்தி, மு.சிவலிங்கத்தின் வழித்துணை, பதுளை சேனாதிராஜாவின் பிளெக் மெஜிக் போன்ற பல கதைகளில் காணமுடிகின்றது. இவற்றுடன் வணிக நடவடிக்கைகள் மூலம் மத்தியதர வர்க்கத்தினராக மேற்கிளம்பியவர்கள் பற்றிய பதிவுகளைச் செந்தூரனின் நடுக்கடலில், தெளிவத்தை ஜோசப்பின் ஒரு தோட்டத்துப் பையன்கள் படம் பார்க்கப் போகிறார்கள், மாத்தளை சோமுவின் உயிருள்ள பிணங்கள், மு. சிவலிங்கத்தின் வல்லமை தாராயோ, கும்பா, நகை ஈடு பிடிக்கும் இடம் போன்ற கதைகளில் கண்டுகொள்ள முடிகின்றது. மலையகத்திலிருந்து தொழிற்சங்கம் மற்றும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் பொருளாதார ரீதியாக விருத்தி பெற்று மத்தியதர வர்க்கத்தினராகவே வாழ்கின்றனர். இவ்வகையான சிறுகதைகளை மொத்தமாக நோக்கின் மத்தியதர வர்க்கத்தினராக மேற்கிளம்பியவர்கள் பொருளாதார ரீதியாக விருத்தி பெற்றுள்ளதுடன் தோட்டங்களைவிட்டு நகரங்களில் சென்று குடியேறியுள்ளனர். அவர்களது வீடுகள் லயம் வீடுகள் போலல்லாது மிகவும் விரிந்ததாக அமைந்திருந்துள்ளன. பலரும் சொந்த வாகனங்களை வைத்திருந்துள்ளதுடன் பெருந்தோட்டங்களுக்கும் அவ்வாறு நகரங்களை நோக்கி நகர்ந்தவர்களுக்கும் இடையே ஓர் அந்நியத் தன்மை தோற்றம்பெற்றுள்ளது என்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

பதுளை சேனாதிராஜாவின் பிளெக் மெஜிக் என்ற கதையில் தோட்டத்திலிருந்து சென்று கொழும்பில் வாழும் குடும்பத்தைக் காணமுடிகின்றது. அவர்கள் சொந்தமாக கார் வைத்திருக்கின்றனர்ளூ மகள் சர்வதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கின்றாள். அவர்களின் குடும்ப நண்பராக ஆங்கிலம் பேசும் ஆஸ்திரேலிய குடும்பம் விளங்குகின்றது. தந்தை, மகள் உரையாடல்கள் பெரிதும் ஆங்கிலத்திலேயே இடம்பெறுகின்றன. இவை மலையகத்திலிருந்து மேற்கிளம்பிய மத்தியதர வர்க்கத்தினரின் வாழ்வியல் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. சாந்தாராஜின் சபலம் என்ற கதையில் வரும் சங்கரன் தபாலகத்தில் வேலை செய்வதோடு சொந்தமாக வீடு கட்டி நகரில் வாழ்கின்றான். அவனது வீட்டில் ஒரு பகுதியை வாடகைக்கு கொடுக்கும் அளவுக்கு அவனது வீடு பெரிதாக அமைந்துள்ளது. பெருந்தோட்டத் தொழிலில் தமக்கு முழு உரிமையற்ற லயம் என்ற ஓரறை அல்லது ஈரறை வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தவர்களின் வீடுகள் சொந்தமானதாகவும் விஸ்தாரமானதாகவும் அமைந்துள்ளதை இங்கு காணலாம்.

மலையகத்தில் மேற்கிளம்பிய மத்தியதர வர்க்கத்துக்கும் பெருந்தோட்டங்களுக்கும் இடையே ஏற்பட்டுவரும் அந்நியத்தன்மை தெளிவத்தை ஜோசப்பின் அம்மா, மாத்தளை சோமுவின் அவன் ஒருவனல்ல, மு. சிவலிங்கத்தின் எனக்கு ஒரு மயக்கம், த. மயில்வாகனத்தின் சமர்ப்பணம், அல் அஸ்மத்தின் விரக்தி போன்ற கதைகளில் சிறப்பாக வெளிப்பட்டுள்ளன எனலாம். உதாரணத்துக்கு, தெளிவத்தை ஜோசப்பின் அம்மா என்ற கதையில் கொழும்பில் வேலை செய்து கொண்டு தனது குடும்பத்துடன் வாழும் நபர் தனது தாயைப் பார்க்க ஆண்டுக்கு ஒரு முறை தோட்டத்துக்குச் சென்று வருகின்றார். அவ்வாறு வந்து போகும்போது அவன் வீட்டில் தங்கிவிட்டு போவதில்லை. அதற்கான காரணங்களை ஆசிரியர் பின்வருமாறு காட்டுகின்றார்:

> ‘லயத்தின் முன் லைசன் கல்லில் நின்றுதான் பல்துலக்கி முகம் கழுவ வேண்டும். முழு லயமுமே நின்று வேடிக்கை பார்க்கும். இல்லாவிட்டால் பட்டிப் பக்கம் போய்விட வேண்டும்….
>
> முழு லயத்துக்குமே இருப்பது இரண்டே மலசல கூடங்கள். அதுவும் தேயிலைக்குள்ளே போக வேண்டும் கையில் செம்புடனோ கைவாளியுடனோ!
>
> கொழும்பிலே பழகிவிட்ட மனைவி மக்களுடன் இதெல்லாம் சிரமம். ஆகவே தான் மனதைக் கடித்துக் கொண்டு வந்த அன்றே கிளம்பி விடுவான்’ (தெளிவத்தை ஜோசப், 2013: 84)

புதிய மத்தியதர வர்க்கத்துக்கு உள்ள இச்சிக்கல் காரணமாக பெருந்தோட்டங்களுடனான தொடர்பைப் பேண அவர்கள் விரும்புவதில்லை. குறிப்பாக, புதிதாக மேற்கிளம்பிய இம்மத்தியதர வர்க்கத்தினர் தமது திருமண உறவுகளை நகரப் பகுதிகளில் வைத்துக்கொண்டதால் அவர்கள் பெருந்தோட்டங்களை இழிவாகக் கருதியதோடு அவ்வுறவுகளுக்காகப் பெருந்தோட்டத்தைவிட்டு தூர விலகியிருக்க விரும்பினர். எடுத்துக்காட்டாக, சமர்ப்பணம் என்ற கதையில் வரும் பின்வரும் சித்திரிப்பினைக் கூறலாம்:

> ‘படுக்கையறை, லிவிங், டைனிங் இத்யாதிகளோடு வாழ்ந்து பழகிவிட்ட என் மனைவிக்கு நாம் தோட்டத்துக்குப் போகிறோம் என்றதுமே மூட் அவுட். அங்கே குளியலறை கிடையாது.

மலசலகூட வசதிகூட ஒழுங்காய் இல்லை என்று சாக்கு போக்குச் சொல்லி சமாளிப்பாள்….' (மலையகப் பரிசுக் கதைகள், 1994: 98)

இந்நிலையால் பலரும் பெருந்தோட்ட உறவைப் பேணுவதில் சிக்கல்களை எதிர்கொண்டனர். அத்துடன் பெருந்தோட்டத்துறையிலிருந்து நகரங்களை நோக்கிச் சென்றவர்களும் நகரங்களின் சொகுசு வாழ்வை விரும்பி பெருந்தோட்டத்துறையை வெறுத்துள்ளனர். எடுத்துக்காட்டாக:

'நான் இப்போது கொழும்பில் வேலை பார்க்கும் ஒரு கிளார்க். ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்வது. வாடகை அறை அமர்த்தி வசிக்கிறேன். எனது அறையில் மின்சார விளக்குகள் எரிகின்றன. மின்சார விசிறி சுழல்கிறது… மாடி ஜன்னலிலிருந்து நகரத்து அழகுகளை ரசிக்கிறேன்…அதேவேளையில் வீட்டை நினைத்துப் பார்க்க நான் விரும்புவதில்லை. அம்மா சமைத்து போடும் அதே சாப்பாடு. லாந்தர் விளக்கு. விறகு தேடுவது… கடைக்குப் போவது… இப்படி எவ்வளவு சங்கடங்கள்…! அந்தச் சங்கடங்களிலிருந்து ஒதுங்கி இன்று சுதந்திர மனிதனாக வாழ்கிறேன்' (சிவலிங்கம், 1992: 87)

இப்பதிவுகள் புதிதாக மேற்கிளம்பிவரும் மத்தியதர வர்க்கத்தினரின் மனோநிலையை அப்பட்டமாக அம்பலப்படுத்தியுள்ளன. இந்த அந்நியத்தன்மையின் வளர்ச்சியாகவே அவர்கள் பெருந்தோட்டங்களோடு மண உறவுகளை தவிர்த்து நகரங்களில் திருமண உறவுகளை வைத்துக்கொண்டு நகர வாசிகளாகவே வாழ்கின்றனர். அதனால் பலர் மலையகம் என்ற அடையாளத்தை விட்டு தமிழர் என்ற அடையாளத்துடன் பெரு நகரங்களிலும் நகரங்களை அண்டிய பகுதிகளிலும் வாழ்கின்றனர். இதனையே அல் அஸ்மத், 'கொழும்புக்கு வந்தவுடன் சில ஜீவன்கள் கொள்ளுப்பிட்டியிலோ குருந்துவத்தையிலோ பிறந்து கொள்வதைப் போல் என்னால் முடியவில்லை…' (மலையகப் பரிசுக் கதைகள், 1994: 02) எனக் கிண்டல் செய்கின்றார். அவ்வாறு கொழும்புவாசிகளாக வாழ்பவர்கள் பற்றிய பதிவுகளைத் தெளிவத்தை ஜோசப்பின் கதைகளில் பரவலாகக் காணமுடிகின்றது. உதாரணத்துக்கு, பொட்டு, இன்னுமொரு, பந்து, சுவர், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் போன்ற பல கதைகளைக் கூறலாம்.

## முடிவுரை

நாட்டின் தேசிய மட்டத்திலும் பெருந்தோட்டத்துறை சமூக அமைப்பிலும் ஏற்பட்ட அரசியல், சமூக, பொளாதார மாற்றங்களால் மலையகத்தில் பலமான மத்தியதர வர்க்கமொன்று தோற்றம் பெற்றுள்ளது. மலையகத்தமிழரின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்வில் இம்மத்தியதர வர்க்கத்தினரின் தாக்கங்கள் கனதியானதாகவே அமைந்துள்ளன. அவர்கள் பற்றிய சிறுகதைப் பதிவுகளின்படி தோட்ட இடைநிலைப் பணியாளர்கள் மத்தியதர வர்க்கத்தினராக உயர்தல், தொழிலாளர் குழுவிலிருந்து கற்று மத்தியதர வர்க்கத்தினராக உயர்தல் என்ற இரண்டு வகைகளில் மலையகத்தில் மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றுள்ளமையைக் கண்டுகொள்ள முடிகின்றது. அத்துடன் அவர்களது வாழ்க்கைப் போக்கும் மனோநிலையும் தொழிலாளர் குழுவிலிருந்து பெரிதும் மாற்றங் கண்டுள்ளன. பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் பெருந்தோட்ட எல்லைகளைத் தாண்டி நாட்டினுடைய பெரு நகரங்களிலும் நகரங்களை அண்டிய பகுதிகளிலும் தமக்கான சொந்த வீடுகளைக் கட்டி வாழ்கின்றனர். அவ்வாறு வாழ்பவர்களுக்கும் பெருந்தோட்டங்களுக்கும் இடையே ஓர் அந்நியத்தன்மை மிகுந்துவருகின்றது. இவை போன்ற பதிவுகளே அதிகம் இடம்பெற்றுள்ளன. அவற்றைத் தாண்டி அவ்வர்க்கத்தின் மொத்த வாழ்வையும் வெளிப்படுத்தும் பதிவுகள் மிக மிக அரிதாகவே இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, பெருந்தோட்டத் தொழிலாளர்கள், அவர்களது வாழ்நிலைமை, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்றன பற்றி இடம்பெற்றுள்ள பதிவுகளோடு ஒப்பிடுகையில் மலையகத்தில் தோன்றியுள்ள பெருந்தோட்டத்துறைசாரா குழுமம் பற்றி நுட்பமாகவும் கூர்மையாகவும் வெளிப்படுத்தும் பதிவுகள் அரிதாகவே இடம்பெற்றுள்ளன. இதற்கு மலையகத் தமிழரின் சமூக அசைவியக்கம் குறித்த தெளிவின்மையே அடிப்படைக் காரணமாக அமைகின்றது எனலாம். ஏனெனில் மலையகம் என்றாலே பெருந்தோட்டத் தொழிலாளர்களையே குறிக்கும் என்ற மாறாவுருநிலைப்படிவு பெரிதும் வழக்கில் உள்ளது. இந்நிலை மலையகத் தமிழரிடத்து ஏற்பட்டுவரும் வளர்ச்சியினை அடையாளப்படுத்துவதற்கும் சமூக மாற்றங்களை சுட்டிக்காட்டுவதற்கும் தடையாக அமைகின்றது. அதனால் மலையகத் தமிழ்ச் சமூகத்தின் அசைவியக்கம் குறித்த சரியான புரிதல் ஏற்படுமிடத்து, தொழிலாளர் என்ற வட்டத்திலிருந்து விடுபட்டு புதிதாக கிளைத்தெழும் வர்க்கத்தட்டுக்கள் பற்றியும் நகர்வுகள் பற்றியும் படைப்பாளிகள் அக்கறை கொள்வர்.

## உசாத்துணை நூற்பட்டியல்

குமாரி ஜயவர்தனா (2009) **இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்,** கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சாந்தாராஜ், (2001) **சாந்தாராஜின் சிறுகதைகள்,** கண்டி: மலையக வெளியீட்டகம்.

சாரல்நாடன் (1994) **மலைக்கொழுந்தி,** சென்னை: பாரி நிலையம்.

சிவலிங்கம், மு, (1992) **மலைகளின் மக்கள்,** இளவழகன் பதிப்பகம்.

…………………(2005) **ஒரு விதை நெல்,** சென்னை: மணிமேகலைப் பிரசுரம்

…………………(2010) **ஒப்பாரிக்கோச்சி,** நாவல் நகர்: தமிழ்ச்சங்க வெளியீடு.

செல்வராஜா, வ (க.ஆ) (2017) **"மலையக மக்களும் புத்திஜீவிகளும் : ஒரு மீள் நோக்கு",** மலையகம் : பல்பக்கப் பார்வை, தனராஜ், தை (ப.ஆ), இர. சிவலிங்கம் ஞாபகார்த்த குழு.

தெளிவத்தை ஜோசப், (2013) **மீன்கள்,** சென்னை: நற்றிணை பதிப்பகம்.

……………………. (2014) **தெளிவத்தை ஜோசப் கதைகள்,** ஹட்டன்: பாக்யா பதிப்பகம்.

……………………(2016) **நாமிருக்கும் நாடே** (2ஆம் பதிப்பு), கொழும்பு: புனைவகம்.

மாத்தளை சோமு, (1989) **அவன் ஒருவனல்ல,** மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

**உழைக்கப் பிறந்தவர்கள்,** (1997) துரைவி வெளியீடு.

**மலையகப் பரிசுக் கதைகள்,** (1994) கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுச் சிறுகதைப் போட்டி, கலைஒளி முத்தையாப்பிள்ளை நினைவுக் குழு.

ஜெயசீலன், எம்.எம் (க.ஆ) (2018**) "இருபத்தியோராம் நூற்றாண்டு மலையகத் தமிழ்ச் சிறுகதைப் போக்குகள்"**, செவ்வொளி, மஸ்கெலியா: சென் ஜோசப் கல்லூரி.